**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 18-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 01-ம் நாள் திங்கட்கிழமை

CNR:NO: TNNG03-000118-2026

**இந்து திருமண அசல் மனு எண்.25/2026**

ரமிலா ........................மனுதாரர்

....எதிர்....

கோபி ..................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.04.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...........

**ஆணையுரை**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2015-ல் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க கோரியும், இதர உகந்த பரிகாரங்கள் வழங்க கோரியும், இந்து திருமண சட்டம் பிரிவு 13(1) (i-a), (i-b)-ன் கீழ் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.06.01 19:23:05 +0530

## II. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2015 அன்று நீடாமங்கலம் தாலுக்காவில் உள்ள எதிர்மனுதாரரின் வீட்டில் உற்றார் உறவினர்கள் மற்றும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டவாறு திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு ஆறரை பவுன் தங்கநகையும், 250 கிராம் வெள்ளிக்கொலுசும், எதிர்மனுதாரருக்கு 4 பவுன் நகையும் பித்தளை சாமான்கள், வீட்டு உபயோக பொருட்கள், கட்டில், மெத்தை இதர சாமான்களும், இருசக்கர வாகனமும் வாங்கி கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரரின் வீட்டில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக சேர்ந்து குடும்பம் நடத்தியபோது சுமார் ஓராண்டு காலம் சிறு சிறு பிரச்சினைகள் இருந்தபோதிலும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள் என்றும், பின்னர் குழந்தை பிறக்கவில்லை என்று மனுதாரரை பேச ஆரம்பித்தார்கள் என்றும், மனுதாரரின் நகைகளை எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் வாங்கி அடகு வைத்துவிட்டார்கள் என்றும், எதிர்மனுதாரர் கொத்தனார் வேலைக்கு சென்றுவிட்டு இரவில் தினமும் குடித்துவிட்டு வருவதும், வேலைக்கும் செல்லும் இடங்களில் பழக்கமான மற்றும் உறவுக்கார பெண்களுடன் இரவு நேரங்களில் நீண்ட நேரம் உரையாடுவதும், மனுதாரர் கேட்டால் மனுதாரரை நீ என்னடி கேள்வி கேட்கிறாய், குழந்தை பெற்றுக்கொடுக்க வக்கில்லை என்றும் திட்டி, அடித்து உதைத்து கொடுமைகள் செய்து வந்தார் என்றும், இருவருக்கும் குழந்தை இல்லை என்று பிரச்சினையாக இருந்ததால் மனுதாரரின் பெற்றோர் தரப்பில் எதிர்மனுதாரரை நாகப்பட்டினம் தனியார் மருத்துவமனையில் அழைத்து சென்று பரிசோதனை செய்தபோது எதிர்மனுதாரருக்கு குறைபாடு இருந்தது தெரியவந்து உரிய சிகிச்சை எதிர்மனுதாரர் மருத்துவ சிகிச்சைக்கு ஆட்படாமல் எதிர்மனுதாரர் அதிகமாக

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.06.01 19:23:11 +0530

குடிக்க ஆரம்பித்தார் என்றும், எதிர்மனுதாரர் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வந்து மது அருந்துவதும், சித்ரவதை செய்வதும், எதிர்மனுதாரர்களுக்கு நண்பர்களுக்கு தேவையான உணவு பொருட்கள் செய்து கொடுக்க சொல்வதும், மனுதாரர் செய்து கொடுக்கவில்லை என்றால் மனுதாரரை அடிப்பதும், சித்ரவதை செய்வதையும் வாடிக்கையாக கொண்டிருந்தார் என்றும், எதிர்மனுதாரர் மற்றும் அவரது வீட்டாரின் தொந்தரவும், கொடுமையும் தாங்கமுடியாமல் 2021ம் ஆண்டு தனது பெற்றோர் வீட்டிற்கு மனுதாரர் வந்துவிட்டார் என்றும், சேர்ந்து வாழ மனுதாரர் தரப்பில் முயற்சித்து எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளாததால் கடந்த 04.02.2025 அன்று நாகப்பட்டினம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, விசாரணைக்கு ஆஜரான எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும், திருமணத்தின்போது செய்விக்கப்பட்ட நகைகள் மற்றும் பொருட்கள் அனைத்தையும் திருப்பி கொடுத்துவிடுவதாக கூறியதால் 05.02.2025 பொருட்கள் ஒப்படைக்கப்பட்டும், 05.03.2025 ம் தேதி நகைகள் மற்றும் இருசக்கர வாகனம், அதன் ஆர்சி புத்தகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் மனுதாரரின் கல்வி சான்று நாளது தேதி வரை ஒப்படைக்கப்படவில்லை என்றும், மனுதாரர் கீழ்வேளூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.02/2025 ல் தாக்கல் செய்து, நிலுவையில் இருந்த நிலையில் எதிர்மனுதாரர் நீதிமன்றத்திற்கு சற்று வெளியே ரோட்டில் நின்று கொண்டு வழக்கை வாபஸ் வாங்காவிட்டால் நடப்பதே வேறு என்று கடுமையாக அச்சுறுத்தல் செய்துவிட்டு நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு வராமல் திரும்பி சென்றுவிட்டார் என்றும், எதிர்மனுதாரர், மனுதாரரை வாழ வைப்பதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்து

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.06.01 19:23:16 +0530

விவாகரத்து பெற்றுக் கொள்ள மனுதாரர் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

III. மனுதாரரின் மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் கடந்த 16.04.2026 அன்று எதிர்மனுதாரரை தோன்றாதரப்பினராக தீர்மானித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## IV. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

V. மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## VI. பிரச்சனைக்கான தீர்வு

1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும் விதமாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 மனுவில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து முதன்மை விசாரணை வாக்குமூலம் அளித்துள்ளார். மனுதாரர் தனது கட்சிக்கு ஆதரவாக 21.08.2015 தேதியிட்ட மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.2

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.06.01 19:23:22 +0530

ஆவணமாகவும், மனுதாரர் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த கீழ்வேளூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.02/2025 ன் மனு நகல் ம.சா.ஆ.3 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து துன்புறுத்தி கொடுமைப்படுத்தி வந்தார் என்றும், திருமணத்தின்போது செய்விக்கப்பட்ட நகைகள், பொருட்கள் மற்றும் இருசக்கர வாகனம் மனுதாரரிடம் எதிர்மனுதாரர் திரும்ப ஒப்படைத்துள்ளார் என்றும், எதிர்மனுதாரருக்கு மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றும், இனியும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றும், மனுதாரரின் மனு மற்றும் சாட்சியம் மூலம் கூறப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் அறிவிப்பு பெற்றுக்கொண்டும் நீதிமன்றம் ஆஜராகி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை மறுத்து எவ்வித எதிர்கட்சியும் செய்யாததால் மனுதாரரின் வழக்கை ஏற்க வேண்டியுள்ளது.

**3)** மனுதாரரின் மனுவை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரரின் மனு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது. மனுதாரரும், எதிர்மனுதாரரும் 2021ம் ஆண்டிலிருந்து பிரிந்து வாழ்ந்து வரும் நிலையிலும், திருமணத்தின் பலனாக இருவருக்கும் குழந்தை இல்லாத நிலையிலும், எதிர்மனுதாரரை மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடுவது இருவரின் வாழ்க்கையிலும் நிம்மதியை ஏற்படுத்தாது

என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2015 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடுகிறது.

VII. **முடிவாக,**

1. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.08.2015 அன்று நடைபெற்ற திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, பிழைநீக்கம் செய்து இன்று 01.06.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.06.01 19:23:34 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 திருமதி. ரமிலா (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.08.2015 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | (அசல்) |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.3 | -- | கீழ்வேளூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் M.C.No.02/2025 ன் மனு | (நகல்) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்** : இல்லை

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.06.01 19:23:41 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **உத்தரவு**

**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

**இந்து திருமண அசல் எண்.25/2026**

நாள் : 01.06.2026